**OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER**
Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in

தே. எண் 47/1/2026- பொதுத்தேர்தல் 2026 புதுச்சேரி, தேதி: 15.03.2026

**புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்-2026**

**செய்திக்குறிப்பு**

புதுச்சேரி ஒன்றியப் பிரதேச சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் 15.03.2024 இன்று அறிவித்தது. தேர்தல் அட்டவணை பின்வருமாறு:

| வ. எண். | நிகழ்வு | தேதி |
|---|---|---|
| 1 | அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்படும் நாள் | 16.03.2026 (திங்கள்கிழமை) |
| 2 | வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 23.03.2026 (திங்கள்கிழமை) |
| 3 | வேட்பு மனுக்களை பரிசீலனை செய்வதற்கான இறுதி நாள் | 24.03.2026 (செவ்வாய்க்கிழமை) |
| 4 | வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் | 26.03.2026 (வியாழக்கிழமை) |
| **5** | **வாக்குப்பதிவு நாள்** | **09.04.2026 (வியாழக்கிழமை)** |
| 6 | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 04.05.2026 (திங்கள்கிழமை) |
| 7. | தேர்தல் நடைமுறைகள் முடிவுறும் கடைசி நாள் | 06.05.2026 (புதன்கிழமை |

**மாதிரி நடத்தை விதிகள்**

- மாதிரி நடத்தை விதிகள் இன்று (15.03.2024) முதல் உடனடியாக நடைமுறைக்கு வந்து தேர்தல் செயல்முறை முடியும் வரை அமலில் இருக்கும்.
- மாதிரி நடத்தை விதிகள் அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து வேட்பாளர்கள், அரசு மற்றும் அரசு அதிகாரிகள்/ஊழியர்களுக்குப் பொருந்தும்.
- அரசியல் கட்சிகள் மாதிரி விதிகளுக்குக் கட்டுப்பட்டு, பகைமை, கசப்புணர்வு இல்லாத சுதந்திரமான, நியாயமான அமைதியான தேர்தல் நடைபெறுவதற்குத் தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- அரசியல் விளம்பரங்களைக் காட்டும் விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகள் அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். பாண்டிச்சேரி பொது இடங்கள் (சிதைவு தடுப்பு) சட்டம், 2000 (பி. ஓ. பி. பி. டி சட்டம், 2000) பிரிவு 4 இன் படி, "எந்தவொரு நபரும் பொது பார்வைக்கு திறந்திருக்கும் எந்த இடத்தையும் மை, சுண்ணாம்பு, வண்ணப்பூச்சு அல்லது வேறு எந்த பொருளாலும் எழுதுவதன் மூலமோ குறிப்பதன் மூலமோ சிதைக்கக்கூடாது.

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


- புகார்களின் அடிப்படையில் இந்த விதியை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். காவல்துறை மூலம் வழக்குகள் பதிவு செய்யப்படும்.
- பொது இடங்களில் அரசியல் / விளம்பர பதாகைகள், சுவர் விளம்பரங்களை அகற்றுவதற்கு அரசியல் கட்சிகள், வியாபாரிகள், பொதுமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.
- அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் கவனத்திற்கு. தேர்தல் ஆணையத்தின் 02.01.2024 ஆம் தேதியிட்ட கடிதம் எண். 437/6/INST/ECI/FUNCT/MCC/2024 (தேர்தல் அறிக்கைகள்) யின் படி, தேர்தல் அறிக்கையில் உள்ள நலத்திட்டங்கள் தொடர்பான தேர்தல் ஆணைய விதிகள் மற்றும் இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வழங்கிய வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- அனைத்து அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைகள் / வாரியங்கள் / மாநகராட்சிகளின் தலைவர்களுக்கு மாதிரி நடத்தை விதிமுறைகள் (MCC) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- எந்தவோர் அரசியல் நடவடிக்கையிலும் பங்கேற்க வேண்டாம் என்று அரசு ஊழியர்கள் எச்சரிக்கப்படுகின்றனர். அரசு ஊழியர்களுக்கு எதிரான எந்தவொரு புகாரும் கடுமையாகக் கையாளப்படும். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் மீது நடத்தை விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன், பாரதீய நியாய சம்ஹிதா (BNS) பிரிவு 223 இன் கீழ் குற்றவியல் நடவடிக்கையும் தொடங்கப்படும்.
- தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறை உட்பட அனைத்து அலுவலர்களும் / அதிகாரிகளும் 1950-மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950-ன் பிரிவு 13CC-ன் படி இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊழியர்களாக கருதப்படுவார்கள். மேலும் அச்சமோ ஆதரவோ இல்லாமல் நடுநிலையுடன் தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்களின் செயல்பாடு ஆணையத்தின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

**வாக்காளர் பட்டியல்:**

- 01.01.2026 தேதியை தகுதி நாளாகக்கொண்டு இறுதி வாக்காளர் பட்டியல் 14.02.2026 அன்று வெளியிடப்பட்டது.
- வாக்காளர் பட்டியலின்படி, மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 9,48,977 ஆகும் (ஆண்கள்: 4,45,761; பெண்கள்: 5,03,076 மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள்: 140) இதில் 1665 வெளிநாடு வாழ் இந்திய வாக்காளர்களும் (ஆண்கள்: 1326; பெண்கள்: 339) அடங்குவர். இது தவிர, 327 சேவை வாக்காளர்களும் (ஆண்கள்: 305; பெண்கள்: 22) தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாவர். மொத்த மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் 13802 (ஆண்கள்: 7478; பெண்கள்: 6323 மற்றும் மூன்றாம் பாலினத்தவர்: 1) ஆவர்.

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


- இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, பெறப்படும் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் பரிசீலனைக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படும். தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, நீக்குதல் மற்றும் மாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**வாக்குச்சாவடி**

- புதுச்சேரி யுனியன் பிரதேசத்தில் உள்ள வாக்குச் சாவடிகளை சீரமைத்தல் தொடர்பான பணிகள் நிறைவடைந்துள்ளன.
- சீரமைக்கப்பட்ட பிறகு, இந்திய தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, 1099 வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 18 வாக்குச் சாவடிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன; 115 வாக்குச் சாவடிகளின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. இது குறித்த விவரங்கள் விரைவில் தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் இணையதளங்களில் வெளியிடப்படும்.
- 4934 ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். புதுச்சேரி காவல்துறையைச் சேர்ந்த 5410 காவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள்:**

- அனைத்து வாக்குச்சாவடிகளிலும் போதுமான மேஜை-நாற்காலிகள், உதவி மையம், மின்சாரம் மற்றும் போதுமான விளக்குகள், சாய்வுபாதை (Ramp) வசதி, சரியான குறியீட்டு பலகைகள் (Signage), கழிப்பறை வசதி, குடிநீர் ஏற்பாடு, நிழற்குடை, அணுகக் கூடிய சாலைகள் உள்ளிட்ட **உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் (Assured Minimum Facilities)** வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகளுக்கான கூடுதல் வசதிகள்:**

- வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளர்களில் மாற்றுத்திறனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் மாற்றியமைக்கக்கூடிய மேசைகள் போன்ற வசதிகள் வழங்கப்படும்.
- பார்வையற்றோர், செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் மற்றும் பேச்சு திறன் குறைபாடுள்ளவர்களுக்கு, சிறப்பு பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் பணியமர்த்தப்படுவார்கள்.
- பார்வையற்ற வாக்காளர்களின் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் பிரெய்லி வாக்குச் சீட்டுகள் வைக்கப்படும், மேலும் அவர்கள் விரும்பினால் ஒரு நபர் துணைக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
- மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் உதவி பெறக்கூடிய Shaksham என்ற செயலியும் இந்திய தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் வாகனம் உள்ளிட்ட தேவைகளை சக்ஷம் செயலி மூலமாக கோரும் பட்சத்தில் தேர்தல் துறை வசதிகளை செய்து தரும்.

- மாணவ தன்னார்வலர்கள் வாக்காளர்களின் கோரிக்கையின் பேரில் ஊனமுற்றவர்களுக்கு வாக்குச் சாவடிக்கு அழைத்துச் செல்வதிலிருந்து அவர்கள் வீட்டிற்குத் திரும்பும் வரை ஒருவருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் சேவையை வழங்குவார்கள்.

**சிறப்பம்சங்களுடன் கூடிய மாதிரி வாக்குச்சாவடிகள்:**

**மகளிர் நிர்வகிக்கும் வாக்குச்சாவடி:**
30 மகளிர் நிர்வகிக்கும் வாக்குச் சாவடிகள் (ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளில் ஒன்று) என்ற அடிப்படையில் அமைக்கப்படும். அவை மகளிர் அரசு ஊழியர்களால் நிர்வகிக்கப்படும்.

**இளைஞர்கள் நிர்வகிக்கும் வாக்குச் சாவடி:**
5 வாக்குச் சாவடிகள் (புதுச்சேரி மாவட்டத்தில் 3 வாக்குச் சாவடிகள் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் 2 வாக்குச் சாவடி) அமைக்கப்பட்டு அவை இளம் அரசு ஊழியர்களால் நிர்வகிக்கப்படும்.

**அனைத்து மாற்றுத்திறனாளிகள் நிர்வகிக்கும் வாக்குச் சாவடிகள்:**
3 வாக்குச் சாவடிகள் (புதுச்சேரி மாவட்டத்தில் 2 வாக்குச் சாவடிகள் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் 1 வாக்குச் சாவடி) அமைக்கப்பட்டு அவை மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்களால் நிர்வகிக்கப்படும்

**தனித்துவமான வாக்குச் சாவடி**
புதுச்சேரி மிஷன் வீதியில் உள்ள வ. ஊ. சி. அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி (பிராங்கோ-தமிழ் கட்டிடக்கலை பாரம்பரியம் மற்றும் அதன் சமீபத்திய மறுசீரமைப்பு/மறுவடிவமைப்பு காரணமாக), மற்றும் காரைக்கால் தந்தை பெரியார் அரசினர் பள்ளி ஆகியன யூனியன் பிரதேசத்தில் தனித்துவமான வாக்குச் சாவடிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

**சேவை வாக்காளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வாக்களித்தல்**:

- அனைத்து சேவை வாக்காளர்களுக்கும் மின்னணு பரிமாற்ற அஞ்சல் வாக்கு முறை (ETPBS) மூலம் வாக்குகள் வழங்கப்படும்
- தேர்தல் பணியில் உள்ள அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தபால் வாக்குகள் வழங்கப்பட்டு அவர்கள் வாக்கினைப் பதிவு செய்ய வசதிகள் செய்துத்தரப்படும்.

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கினை சரிபார்ப்பு இயந்திரம்:**

- மத்திய தேர்தல் ஆணையம், பெல் இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட எம்3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் புதுச்சேரியின் யூனியன் பிரதேசத்திற்கு ஒதுக்கியுள்ளது. மொத்தமாக, 3349 வாக்களிக்கும் கருவி (304%), 1801 கட்டுப்பாட்டுக் கருவிகள் (164%) மற்றும் 2046 வாக்கு சரிபார்ப்பு இயந்திரங்கள் (186%) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ளன.

- அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கு சரிபார்ப்பு இயந்திரங்கள் போதுமான அளவு கையிருப்பு உள்ளது.
- அரசியல் கட்சிகள் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்கு சரிபார்ப்பு இயந்திரங்களின் முதல் நிலை சோதனை மேற்கொள்ளப்பட்டது.
- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பகுதிகளிலும் வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்கு சரிபார்ப்பு இயந்திரங்கள் குறித்த பயிற்சி அனுபவம் EVM செயல் முறை விளக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டது. மொத்தம் 28019 நபர்கள் இம்மையங்களுக்கு வந்து வாக்குப் பதிவு செய்து பயிற்சி பெற்றனர்.
- புதுச்சேரியின் ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் உள்ள அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்கு சரிபார்ப்பு இயந்திரங்கள் (EVM-VVPATs) பயன்படுத்துவது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தீவிரமான பிரச்சாரங்கள் நடமாடும் வாக்குச் சாவடி மூலம் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 7309 நபர்கள் இந்நடமாடும் வாக்குச் சாவடியில் வாக்குப் பதிவு செய்து பயிற்சி பெற்றனர்.

**சட்ட ஒழுங்கு:**

- காவல் துறை, மாவட்ட தேர்தல் அதிகாரியுடன் இணைந்து, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.
- சுமார் **321** சட்ட ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் காவல்துறையால் தற்காலிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. கடைநிலை பகுதி வரை அவ்வப்போது மதிப்பாய்வு செய்வதன் மூலம் அப்பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.
- நிலுவையில் உள்ள **37 NBW-களை** (Non-Bailable Warrants) நிறைவேற்றவும், வங்கி பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்து, நிலுவையில் உள்ள **30 ஆயுதங்களை பறிமுதல் செய்யவும்** காவல்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- பொது அமைதிக்கு இடையூறு செய்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக பா. நா. சு. சட்டம் பிரிவு 126 மற்றும் 129-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
- போதுமான அளவிலான மத்திய ஆயுதக் காவல் படை கோரப்பட்டுள்ளது.
- மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டத்தை அண்டை மாநிலங்களுடன் நடத்துமாறு காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**தேர்தல் செலவினக் கண்காணிப்பு:**

- புதுச்சேரி யூனியன் பிரதேசம் தேர்தல் நோக்கில் செலவினங்கள் அதிகம் நடக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த யூனியன் பிரதேசம் ஆகும்.
- பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்புக் குழுக்கள், காணொளி கண்காணிப்புக் குழுக்கள் இன்று முதல் செயல்படும்.
- இது தவிர, செலவினக் கண்காணிப்புக் குழு, காணொளிக் காட்சிக் குழு, கணக்கியல் குழு ஆகியவை செயல்படும்.

- அரசியல் விளம்பரங்களை முன்கூட்டியே சான்றளிப்பதற்கும், கட்டணச் செய்திகளின் நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கும் மாநில/மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு இன்று முதல் அமைக்கப்பட்டு செயல்படும்.
- மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து பெறப்பட்ட முன் சான்றிதழ் இல்லாமல் எந்த விளம்பரமும் வெளியிடப்படவோ ஒளிபரப்பப்படவோ கூடாது.

**புகார்கள் தீர்க்கும் முறை - கால் சென்டர்**

- புதுச்சேரியில் மாநில/மாவட்ட தொடர்பு மையம் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் மாவட்ட தொடர்பு மையம் ஆகியவை கட்டணமில்லா எண் 1950 மூலம் நிறுவப்பட்டுள்ளன.
- இவை இரண்டும் 24×7 செயல்பாட்டில் இருக்கும்.
- புகார்களைப் பதிவு செய்வதைத் தவிர, தேர்தல் சேவைகளின் தொகுப்பைப் பெறுவதற்கான ஒரே ஆதாரமாக 1950 இருக்கும்.
- வாக்காளர்கள் தங்கள் வரிசை எண், பகுதி எண், வாக்குச் சாவடி இருப்பிடம் மற்றும் அவர்களின் வாக்குச்சாவடி நிலைய அலுவலரின் தொடர்பு விவரங்களை voters.eci.gov.in இல் அறிந்துகொள்ளலாம்.
- மாவட்ட தொடர்பு மையங்கள் ஏற்கனவே அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் நிறுவப்பட்டுள்ளன.
- புகார்களை NGSP இணையம் மூலமாகவும் பதிவு செய்யலாம்.
- துணை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள தொடர்பு மையங்களை தனிப்பட்ட முறையில் கண்காணிப்பார்கள்.
- அனைத்து புகார் கண்காணிப்பு முறைமைகளும் ECINET portal என்ற இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

**முறையான வாக்காளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டம் (SVEEP)**

**1) மெய்ப்பொருள் 2.0**

2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது அறிமுகப்படுத்தப்பட்ட "மெய்ப்பொருள்" முயற்சியின் மேம்பட்ட மற்றும் விரிவான வடிவமான **"மெய்ப்பொருள் 2.0"** திட்டத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்தத் திட்டம் தேர்தல்களைச் சார்ந்த தவறான தகவல்கள் மற்றும் பொய்யான செய்திகள் அதிகரித்து வரும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிறது.

இந்த முயற்சி, குறிப்பாக தேர்தலைச் சார்ந்த எந்தவொரு தகவலையும் பகிர்வதற்கு முன் அல்லது நம்புவதற்கு முன் **"சிந்தியுங்கள் – சரிபாருங்கள் – செயல்படுங்கள்"** என்ற முறையை பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதன் முக்கிய நோக்கம், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் மற்றும் பொறுப்புடன் செயல்படச் செய்வதாகும். அதாவது, தேர்தலைச் சார்ந்த தகவல்களை **இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் புதுச்சேரி தேர்தல் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகப் பக்கங்கள்** மூலம் சரிபார்க்காமல் நம்பவோ பரப்பவோ கூடாது என்பதை மக்களிடையே சேர்ப்பதே இதன் குறிக்கோள்.

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தேர்தலைச் சார்ந்த தகவல்களை பல்வேறு சமூக ஊடக தளங்களில் கண்காணிக்க **24×7 செயல்படும் தனிப்பட்ட சமூக ஊடக கண்காணிப்பு மையம்** அமைக்கப்படும். இது இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தேர்தல் காலத்தில் நம்பகமான தகவல்களை உறுதி செய்யவும் பொறுப்பான டிஜிட்டல் பங்கேற்பை ஊக்குவிக்கவும் ஒரு முக்கியமான படியாக, **"மெய்ப்பொருள் 2.0"** திட்டத்தை ஒரு காணொளி வெளியீட்டின் மூலம் அதிகாரப்பூர்வமாக இன்று அறிமுகப்படுத்துகிறோம்.

**2) Count the Carbon 2.0**
2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது தேர்தல் செயல்முறையில் **கார்பன் தடத்தை (Carbon Footprint)** குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விட, 2026ஆம் ஆண்டு தேர்தல்களிலும் அதிக முயற்சி / நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்காக, பயன்படுத்தப்பட்ட பொருட்களை மறுசுழற்சி செய்தல், இயன்ற இடங்களில் நிலைத்தன்மை வாய்ந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்துதல், வாகனங்கள் மற்றும் பிற வளங்களை திறனாகப் பயன்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் கார்பன் வெளியீட்டை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், **Systematic Voters' Education and Electoral Participation (SVEEP)** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் **#WalkToVote** இயக்கத்தின் மூலம் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடிகளுக்கு நடந்து / மனித சக்தியில் இயங்கும் வாகனங்கள் மூலம் சென்று வாக்களிக்க ஊக்குவிக்கப்படுவார்கள். இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலைத்தன்மை வாய்ந்த தேர்தல் செயல்முறையை உருவாக்க உதவியாக இருக்கும்.

இந்த முயற்சிகள், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதோடு ஜனநாயக பங்கேற்பையும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன.

**3) திருவிழா போன்ற சூழலை உருவாக்குதல்**
இந்த ஆண்டு, **SVEEP** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் தேர்தல் செயல்முறையை ஒரு **திருவிழா போன்ற இனிமையான அனுபவமாக** மாற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் மகிழ்ச்சியுடன் மற்றும் உற்சாகத்துடன் தேர்தலில் பங்கேற்கும் சூழலை உருவாக்குவதே இதன் நோக்கம்.

இதற்காக, மெய்நிகர் உண்மை (**Virtual Reality - VR) வாக்குச்சாவடி அனுபவங்கள்**, கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களை ஈர்த்து வாக்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கப்படும்.

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


இந்த முயற்சிகளின் மூலம், **"தேர்தல் திருவிழா, புதுச்சேரியின் பெருவிழா"** என்ற கருத்தை முன்னிறுத்தி, 2026ஆம் ஆண்டு தேர்தலை ஜனநாயகத்தின் கொண்டாட்டமாக மாற்றுவதே எங்களின் நோக்கமாகும். இதன் மூலம் புதுச்சேரி மக்களை உற்சாகத்துடனும் பெருமையுடனும் ஜனநாயக செயல்முறையில் பங்கேற்க ஊக்குவிக்க விரும்புகிறோம்.

**தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகள்**

- முந்தைய தேர்தல்களைப் போலவே யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து 1099 வாக்குச் சாவடிகளிலும் வாக்குப்பதிவு நாள் நிகழ்வுகள் இணையத்தில் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் இணையம் மூலமாக நேரடியாக கண்காணிக்கவும் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முக்கியமான நிகழ்வுகள் மற்றும் வாக்கெடுப்பு தரவு தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் பயன்பாட்டின் மூலம் ஆன்லைனில் கைப்பற்றப்படும்.
- வாக்குச் சாவடிகளுக்கு அருகிலுள்ள நிகழ்வுகளைக் கண்காணிக்க முக்கியமான வாக்குச் சாவடிகளில் I.P. கேமராக்கள் பொருத்தப்படும்.

**சி-விஜில் (cVigil)**

- சி-விஜில் என்பது மாதிரி நடத்தை விதிகள் மற்றும் தேர்தல் செலவின விதிமீறல்களை செய்திகள், புகைப்படங்கள் அல்லது வீடியோக்களாக புகாரளிக்க பொது மக்கள் பயன்படுத்தும் மொபைல் செயலியாகும். புகாரைப் பெற்றவுடன், பறக்கும் படைகள் புகார் தொடர்பான இடத்தை உடனடியாக ஆய்வு செய்து, 100 நிமிடங்களுக்குள் தேவையான நடவடிக்கை எடுக்கும். புகார் தெரிவிப்பவர் தொடர்பான விபரங்கள் பாதுகாக்கப்படும். மேலும் புகார் தெரிவிப்பவர் தன்னுடைய விபரங்களை தெரிவிக்காமலும் புகார் தெரிவிக்கலாம்.

**சுவிதா (Suvidha)**

- சுவிதா என்பது வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளுக்கான ஒரு இணையதளமாகும், இது கூட்டங்கள்/அரசியல் பிரச்சாரங்களை நடத்துவதற்கு முன் அனுமதி கோரும் விண்ணப்பத்தை இணையம் மூலமாக சமர்ப்பிக்க உதவுகிறது.

**KYC (Know Your Candidate)**

- உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) என்பது நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பற்றி வாக்காளர்களுக்குத் தெரிவிக்க இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட ஒரு செயலி ஆகும். நியமன செயல்முறை தொடங்கியவுடன் வேட்பாளர்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கும். குடிமக்கள், குறிப்பாக இளைஞர்கள், இந்த செயலியைப் பயன்படுத்தி தகவலறிந்த வாக்காளராக வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in

**ESMS**

• **Election Seizure Management System (ESMS)** என்பது இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கிய ஒரு டிஜிட்டல் தளம் ஆகும். தேர்தல் காலத்தில் சட்டவிரோதமாகப் பகிரப்படும் பணம், மதுபானம், போதைப் பொருட்கள் மற்றும் பிற தூண்டுதல் பொருட்கள் கைப்பற்றப்படும்போது, அவற்றை **உடனடி (real-time) முறையில் பதிவு செய்ய, கண்காணிக்க மற்றும் பின்தொடர்ந்து பார்வையிட** பயன்படுத்தப்படுகிறது.

**Saksham**

• **இந்திய தேர்தல் ஆணையத்தின் Saksham இணையதளம் / செயலி** என்பது மாற்றுத் திறனாளிகள் எளிதாக தேர்தலில் பதிவு செய்து பங்கேற்க உதவும் வாக்காளர் சேவைகள் மற்றும் உதவிகளை வழங்கும் ஆன்லைன் தளம் ஆகும். **மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் இந்த தளத்தின் மூலம் தங்கள் வாக்குச்சாவடி தொடர்பான தகவல்களை அணுக முடியும்.**

**Trend Dissemination System for Counting (TDS)**

• **Trend Dissemination System (TDS)** என்பது இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய அடிப்படையிலான அமைப்பு ஆகும். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் போது **உடனடி (real-time) எண்ணிக்கை நிலவரங்கள் மற்றும் தேர்தல் முடிவுகளை** அதிகாரிகள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுடன் பகிர்ந்து காட்ட பயன்படுகிறது.

**ECINET**

• **ECINET** என்பது இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கிய **ஒருங்கிணைந்த (One-stop) டிஜிட்டல் தளம்** ஆகும். இதில் **c-Vigil, Suvidha, Saksham, ESMS, TDS** போன்ற பல தேர்தல் தொடர்பான செயலிகள் மற்றும் சேவைகள் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## புதிய முயற்சிகள்

### தேர்தல் ஆணையத்தின் புதிய முயற்சிகள்

- வாக்காளர்களின் கைப்பேசிகளை வைக்க **இந்திய தேர்தல் ஆணையம்** சிறப்பு **டெபாசிட் பைகளைக்** ஏற்பாடு செய்துள்ளது. அவை **தன்னார்வலர்களால்** சேகரித்து வழங்கப்படும்.
- வாக்குப்பதிவு நாளில், முந்தைய தேர்தலில் **200 மீட்டர்** தூரத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த வேட்பாளர் உதவி மையங்கள் (**Candidates' Booths),** இந்த தேர்தலில் **வாக்குச்சாவடியில் இருந்து 100 மீட்டர் வெளியே** அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் வாக்காளர்களுக்கு **வரிசை எண் (Serial Number) மற்றும் பகுதி எண் (Part Number)** கொண்ட சீட்டுகளை வழங்கும்**.**

# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER
Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in

**புதுச்சேரி தேர்தல் துறையின் புதிய முன்னெடுப்புக்கள்**

- கைப்பற்றும் நடவடிக்கைகளை நேரடியாக பதிவு செய்ய **பறக்கும் கண்காணிப்பு குழு (Flying Squad Team – FST)** தலைவருக்கு **உடலில் பொறுத்தப்பட்ட கேமரா (Body Camera)** வழங்கப்படும்.
- அதிக செலவு செய்யப்படும் தொகுதிகளில் பணம் மற்றும் இலவச பொருட்களின் (**Freebies)** நகர்வை கண்காணிக்க **ட்ரோன்கள் (Drones)** பயன்படுத்தப்படுகின்றன.

**வாக்குப்பதிவிற்கான அடையாளச் சான்று**

- வாக்குச் சாவடியில் அடையாளம் காணும் நோக்கத்திற்காக மாற்று ஆவணங்களை (பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், புகைப்படத்துடன் கூடிய சேவை அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம், பான் கார்டு, கிராமப்புர வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சுகாதார காப்பீட்டு அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை) ஆணையம் அனுமதிக்கும். ஆணையம் இதுகுறித்த அறிவுறுத்தல்கள் வெளியிட்டவுடன் பகிரப்படும்.

- தேர்தல் துறை வழங்கும் புகைப்பட வாக்காளர் சீட்டு இனி வாக்களிப்பதற்கான தனித்துவ அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. எனவே, வாக்காளர் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட மாற்று ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை வாக்காளர் சீட்டுடன் அவசியம் கொண்டு வர வேண்டும்.

- வெளிநாடு வாழ் இந்திய வாக்காளர்களைப் பொறுத்தவரை, அசல் பாஸ்போர்ட் மட்டுமே அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**ப. ஜவஹர், இ.ஆ.ப.**
**தலைமை தேர்தல் அதிகாரி**